3068

E.1792313
16-07-25

# கல்லூரிக் கல்வி இயக்ககம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| எ.சுந்தரவள்ளி இ.ஆ.ப | இணை இயக்குநர்கள் |
| கல்லூரிக் கல்வி ஆணையர் | அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி |
| கல்லூரிக் கல்வி இயக்ககம், | கல்லூரிக் கல்வி இயக்ககம் |
| சென்னை – 600 015 | |

ந.க.எண். **TNDCE/5143/2025-KL2 ,date .09-07-2025**

**பொருள் :** கல்வி உதவித்தொகை– மாற்றுத்திறனாளிகள் நலம் இயக்குநரகம் தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் – அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவிகள் கணினி (Online)htts://scholarships.gov.in என்ற link பயன்படுத்தி விண்ணப்பிக்க அறிவுறுத்த சுற்றறிக்கை அனுப்ப கோருதல்– சார்பு.

**பார்வை :** மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க.எண்.2715/சிப1/2025, நாள்.08.07.2025

பார்வையில் காணும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடிதத்தில் மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவிகளுக்கான தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவிகள் கணினி (Online)htts://scholarships.gov.in என்ற link பயன்படுத்தி விண்ணப்பங்களை விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

எனவே, மேற்காணும் பொருள் தொடர்பாக அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு/அரசு உதவி பெறும் கல்லூரி மற்றும் சுயநிதி கல்லூரிக்கு சுற்றறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

E. SUNDARAVALLI
COMMISSIONER_HO_TNDCE

இணைப்பு.
மேற்படி

Digitally signed by
RAMAN R
Date: 10-07-2025
12:20:29

அனுப்புநர்
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்,
மாற்றுத்திறனாளிகள் நல
ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
சென்னை–05.

பெறுநர்

1. இயக்குநர்,
   கல்லூரி கல்வித்துறை,
   கல்லூரி கல்வி இயக்ககம்,
   சென்னை–06
2. ஆணையர்,
   பள்ளிக்கல்வித்துறை,
   டி.பி.ஐ வளாகம், நுங்கம்பாக்கம்,
   சென்னை–06
3. ஆணையர்,
   ஆதிதிராவிடர் நலத்துறை,
   சேப்பாக்கம், சென்னை–05
4. ஆணையர்,
   பழங்குடியினர் நலத்துறை,
   சேப்பாக்கம், சென்னை–05
5. ஆணையர்,
   தொழில்நுட்ப கல்வி
   இயக்குநரகம்,
   53, சர்தார் படேல் ரோடு,
   அண்ணாப்பல்கலைக்கழகம்,
   சென்னை–25
6. மாநில திட்ட இயக்குநர்,
   சமக்ர சிக் ஷா அபியான்,
   டி.பி.ஐ வளாகம், நுங்கம்பாக்கம்,
   சென்னை–06
7. இயக்குநர்,
   மெட்ரிக் கல்வி இயக்குநரகம்,
   டி.பி.ஐ வளாகம், நுங்கம்பாக்கம்,
   சென்னை–06
8. மாநகராட்சி ஆணையர்,
   ரிப்பன் கட்டிடம், சென்னை–03
9. அனைத்து மாவட்ட
   மாற்றுத்திறனாளிகள் நல
   அலுவலர்கள்
10. அனைத்து அரசு / அரசு
    உதவிபெறும் சிறப்புப்பள்ளிகளின்
    தலைமை ஆசிரியர்கள்.

ந.க.எண்.2715/சிப1/2025, நாள்.08.07.2025

ஐயா / அம்மையீர்,

பொருள் : மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை–05, சிறப்புப்பள்ளிகள் பிரிவு (திட்டங்கள்) – தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் – 2025–2026 ஆம் கல்வியாண்டுக்கு அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் விண்ணப்பங்களை கணினி வழியாக

பார்வை : National Scholarship Portal (https://scholarships.gov.in )

பார்வையில் காணும் தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் இணைய தளத்தில்(Website) மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் (புதிய விண்ணப்பங்கள் / புதுப்பித்தல் விண்ணப்பங்கள்) கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுக்குள் விண்ணப்பிக்கவும் மற்றும் INSTITUTE NODAL OFFICERக்கு கீழ்குறிப்பிட்டுள்ள காலகெடுக்குள் விண்ணப்பங்களை சரிப்பார்த்து அடுத்த நிலைக்கு அலுவலருக்கு (STATE NODAL OFFICER) அனுப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :-

i. **For Pre-Matric Scholarship Scheme**

| | | |
|---|---|---|
| Opening of Portal for registration | : | 25th June 2025 |
| Last date for online application submission | : | 31th August, 2025 |
| Last date for Institution Verification | : | 15th Sep 2025 |

ii. **For Post-Matric and Top Class Education Scholarship Schemes**

| | | |
|---|---|---|
| Opening of Portal for registration | : | 25th June 2025 |
| Last date for online application submission | : | 31st October 2025 |
| Last date for Institution Verification | : | 15th Nov 2025 |

Link : https://scholarships.gov.in

இத்திட்டத்திற்காக ஒவ்வொரு கல்வி நிறுவனங்கள் / கல்லூரிகள் / பள்ளிகள் / தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள Institute Nodal Officer-களின் e-KYC மற்றும் Aadhaar authentication போன்ற உள்ளீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள், மத்திய அரசின் வாயிலாக வழங்கப்படும் கல்வி உதவித்தொகைக்கு வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி (இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது) மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களை கணினி மூலம் (Online) https://scholarships.gov.in என்ற link-ஐ பயன்படுத்தி விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்கான

குறித்த கால அளவிற்குள் விண்ணப்பிக்க தவறும்பட்சத்தில், மேற்குறித்த link-இல் விண்ணப்பிக்க இயலாது என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுடைய Income certificate, Bonafide certificate, Previous year mark sheet, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது Smart card-UDID-னை மற்றும் இதர சான்றுகள் (தேவைப்படும்பட்சத்தில்) ஒவ்வொரு திட்டத்திற்கும் (Pre Matric /Post Matric /Top class) பதிவேற்றம் செய்ய உரிய விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள சான்றிதழ்கள் உள்ளதா என்பதை INSTITUTE NODAL OFFICER உறுதி செய்து அதன்பின்னர், அடுத்த நிலைக்கு (STATE NODAL OFFICER) மேற்குறிப்பிட்ட காலக்கெடுக்குள் சமர்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் (9ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை பயிலும்) மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் வங்கி கணக்குகளின் விவரங்கள் செயல்பாட்டில் (Activate) உள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த பயனாளிகளின் தற்போது கல்வி பயின்று வருவதற்கான Bonafide சான்றிதழ், Income certificate, Previous year mark sheet, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது Smart card-UDID போன்றவை பதிவேற்றம் இல்லாத நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் STATE NODAL OFFICER அவர்களால் மீண்டும் INSTITUTE NODAL OFFICER-க்கு திருப்பி அனுப்பப்படும் (அல்லது) நிராகரிக்கப்படும் என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கண்ட நிகழ்வுகள் ஏதும் ஏற்படா வண்ணம் ஒவ்வொரு கல்வி நிறுவனத்தில் பணியாற்றி வரும் INSTITUTE NODAL OFFICER-களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் அனைத்து துறை தலைவர்களும் தங்களின் கீழ் உள்ள சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு, மேற்படி திட்டம் மற்றும் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை 15.07.2025க்குள் சுற்றறிக்கை அனுப்பி அதன் நகல் ஒன்றை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : தேசிய கல்வி உதவித்தொகைக்கு வழிகாட்டு நெறிமுறைகள்

ஒம்/- எம்.லக்ஷ்மி
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்

// ஆணைப்படி //

8/7/2025

ஆணை இயக்குநர் (கி)